அழகுசாதன அன்பளிப்பு
விளையாட்டு
பொருள்களுக்கு
ராஜு ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-9105)

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 புரட்டாதி 26 புதன்கிழமை (12 — 10 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 322

கேக், குளிர்பான
தயாரிப்புகள்
மற்றும்
கைக்கடிகாரங்களுக்கு
ராஜு ஸ்ரோர்ஸ்
67, 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-9105)

# அரசு-விடுதலைப்புலிகள் பேச்சு திட்டமிட்டபடி நாளை ஆரம்பம்

## பல்கலைக்கழக திறந்த வெளியில் நால்வர் குழு ஹெலியில் வந்திறங்கும்

யாழ்ப்பாணம். ஒக்ரோபர் 12

ஸ்ரீலங்கா அரசுப் பிரதிநிதிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான பூர்வாங்கப் பேச்சுவார்த்தைகள் திட்டமிட்டபடி நாளையும் நாளை மறுதினமும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கின்றன.

பேச்சு நடத்துவதற்காக ஸ்ரீலங்கா அரசுப் பிரதிநிதிகள் நால்வரும் நாளை காலை 9 மணியளவில் ஸ்ரீலங்கா விமானப் படையின் ஹெலிக்கொப்டர் ஒன்றில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாகவுள்ள திறந்த வெளியில் வந்து இறங்குவர்.

யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் வந்திறக்கும் குழுவினரை விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் வரவேற்று பேச்சு நடத்தும் இடத்துக்குக் கூட்டிச்செல்வர்.

## ஜனாதிபதித் தேர்தலை வடக்கிலும் நடத்துவது பற்றி புலிகளுடன் பேச்சு

### அமைச்சர் தர்மசிறி தகவல்

கொழும்பு, ஒக். 12

ஜனாதிபதித்தேர்தல் வடக்கில் நடத்துவது குறித்து விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் பேச்சுக்களின் போது கலந்துரையாடப்படும் என்று அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தல் வடக்கில் நடத்துவது குறித்து புலிகளுக்கு ஏற்கனவே செய்தி அனுப்பப்பட்டு விட்டதாகவும், யாழ். குடாநாடு உட்பட நாட்டில் சுதந்திரமான நியாயமான தேர்தல்நடத்தப்படுவதற்கு அரசுக்கு உதவும்படி விடுதலைப் புலிகளை கேட்டிருப்பதாகவும் —

இப்போதைய சூழ்நிலையில் புலிகளிடம் இருந்து ஆக்கபூர்வமான சாதகமான பதில் கிடைக்கும் என்ற நம்பிக்கை அரசுக்கு உண்டு என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த விஷயம் பற்றி விடுதலைப் புலிகள் தரப்பில் பேச்சில், கலந்து கொள்ளும் பிரதிநிதிகளிடம் பேசவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வாரம் புலிப்படையினருடன் நடத்தப்படவிருக்கும் பேச்சுவார்த்தைகளில் போர் நிறுத்தம் குறித்தும் பேசப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ஒ-3)

## பேச்சுக்கு இந்தியா ஆதரவாம்!

கொழும்பு, ஒக். 12

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் நாளை ஆரம்பிக்கவிருக்கும் சமாதானப் பேச்சுகளுக்கு இந்தியா தனது ஆதரவை வழங்கியிருப்பதாக—

சிரேஷ்ட அரசு அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி அரசுக்கட்டுப்பாட்டில் உள்ள ''சண்டே ஒப்சேர்வர்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

கொழும்புக்கும் புதுடில்லிக்கும் இடையே தொடர்ச்சியாக இடம்பெற்ற உயர் நிலை ஆலோசனைகளை அடுத்தே இந்த தகவல் வெளியிடப்பட்டிருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பேச்சுகள் குறித்து அரசாங்கம் இன்னும் மௌனம் சாதித்துவருகின்றது.

தம்மை அடையாளங்காட்டிக் கொள்ள விரும்பாத அந்த சிரேஷ்ட அதிகாரி, ''சமாதானப் பேச்சுகள் நடத்தப்படுவதை இந்தியா பகிரங்கமாக ஆதரிக்க மறுத்தாலும், பேச்சுவார்த்தைக்கு முட்டுக்கட்டையாக குறுக்கே

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அரசு-புலிகள் பேச்சுவார்த்தை டி.பிக்கு தெரியாமல் நடக்கிறதாம்

### தனக்கு சம்பந்தமில்லை என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, ஒக். 12

விடுதலைப் புலிகளுடன் புதிய அரசாங்கம் நடத்தும் பேச்சுவார்த்தைகள் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. அதற்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது. எனக்கு தெரியாமல் பேச்சுவார்த்தை நடக்கிறது.

இவ்வாறு ஜனாதிபதி டி.பி விஜேதுங்க கூறியுள்ளார்.

'லக்பிம' சிங்கள வார இதழுக்கு அளித்தபேட்டியிலேயே மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளார் டி.பி.

வடக்கில் நடைபெறுவது இனப்பிரச்சினை அல்ல என்று நீங்கள் நினைக்கிறீர்களா என லக்பிம செய்தியாளர் கேட்டபோது —

''இல்லை. வடக்கில் பயங்கரவாதப் பிரச்சினைதான் உள்ளது. ஆனால் தமிழ் மக்களுக்கு சாதாரணமாக பிரச்சினைகள் இல்லையென்று நான் கூறவில்லை'' — என்றார் விஜேதுங்க.

பொ.ஐ.மு. ஆட்சியமைத்த பின் உங்கள் ஜனாதிபதி பதவிக்கு உள்ள பலம் இல்லாமல் போய்விட்டதே — என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் —

''அதில் பிரச்சினை இருக்கிறது ஆட்சி அதிகாரம் ஒரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

90 ஆம் ஆண்டு ராணுவ நடவடிக்கையின்போது

## தப்பியிருந்த வீடுகள், கட்டடங்களும் தேர்தலுக்குப் பின்னர் தகர்ப்பு!

### தையிட்டியிலிருந்து வந்தவர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக். 12

தையிட்டியில் 1990 ஆம் ஆண்டு இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின்போது தப்பிருந்த பல வீடுகள், கட்டடங்கள் ஆகியவை நடந்த ஓகஸ்ட் மாதத்தில் பொதுத் தேர்தலுக்குப் பின்னர் இராணுவத்தினர் குண்டு வைத்துத் தரைமட்டமாக்கியிருக்கின்றனர்.

இராணுவத்தினரின் பிடியில் இருந்து வெளியேறிய இடங்களாக தையிட்டிப் பகுதியில் இருந்து விட்டு விடுதலையாகி நேற்று இங்கு வந்த பொன்னம்பலம் துரைச்சாமி என்பவர் உதயனுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

பொதுத் தேர்தல் முடிந்த பின்னர் படையினர் ஆவேச

(4-ஆம் பக்கம் பார்க்க)

ஆசிய விளையாட்டுக்குச் சென்ற

## ஸ்ரீலங்காவின் 4 வீரர்கள் ஜப்பானில் தலைமறைவு

### நால்வரும் படைச் சிப்பாய்கள்

டோக்கியோ, ஒக். 12

ஜப்பான், ஹிரோஷிமாவில் தற்போது நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளச் சென்றுள்ள ஸ்ரீலங்கா உடற்பயிற்சி வீரர்களில் நால்வரை காணவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது. இவர்கள் நால்வரும் இராணுவம், கடற்படை, மற்றும் பொலீஸ் படையைச் சேர்ந்தவர்கள்.

இவர்களுடன்—நேபாளத்தைச் சேர்ந்த மூன்று வீரர்களும் பாகிஸ்தானைச் சேர்ந்த இரண்டு வீரர்களும் ஈரானைச் சேர்ந்த ஒரு வீரரும், ஜோர்தானைச் சேர்ந்த ஒரு வீரரும் காணாமற் போய்விட்டனர்.

விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றுவதற்காக ஜப்பானுக்குள் சென்ற இந்த வீரர்கள் அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அங்கு நுழைந்ததும் தலைமறைவாகி அங்கேயே தங்கி தொழில் புரியக்கூடிய வாய்ப்பைப் பெறும் முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம் எனச்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இ.தொ. காங்கிரஸின் ஆதரவு சந்திரிகாவுக்கு?

### தொண்டா சைகை காட்டிவிட்டாராம்

கொழும்பு, ஒக். 12

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவையே இ. தொ. கா ஆதரிக்கும் என்பதற்கான சமிக்ஞையைக் காட்டிவிட்டே தொண்டமான் இந்தியா சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைக் கருத்தில் கொண்டே பொதுமக்கள் ஐக்கிய முன்னணி தமது தேர்தல் பிரசாரத் திட்டத்தை வகுக்க குழு ஒன்றை நியமித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

சந்திரிகாவுக்கு தொண்டமான் ஆதரவளிக்க முன்வந்திருப்பது காமினிக்கு குழப்பத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தம்மை ஆதரிக்கும்படி கோரி காமினி தொண்டமானைக் கடித மூலம் கடைசியாகக் கேட்டிருந்தார் அக்கடிதத்தில் பதிலளிக்காமலேயே தொண்டமான் கடந்த 5 ஆம் திகதி இந்தியா பயணமானார்.

கொழும்பு திரும்பியதும் தொண்டமான் எதிர்வரும் சனிக்கிழமை தமது முடிவை வெளியிடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## ஈ. பி. ஆர். எல். எவ்வும் சந்திரிகாவுக்கு ஆதரவு

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் சந்திரிகாவை ஆதரிப்பதென ஈ.பி.ஆர்.எல்.எவ். இயக்கமும் தீர்மானித்துள்ளது.

வடக்கு—கிழக்கு மக்களின் ஆதரவு சந்திரிகாவுக்குக் கிடைக்கவிருப்பதால் அவர் வெற்றியீட்டுவதற்கேற்ற சாதகமான நிலை நிலவுவதாக அரசியல் அவதானிகள் தெரிவித்தனர். (உ-எ-6)

பிரதித் தலைவர் பதவி வழங்கி

## சந்திரசேகரனை வளைக்க தொண்டா வலை வீசுகிறார்

கொழும்பு, ஒக். 12

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பிரதி அமைச்சருமான பெ. சந்திரசேகரன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் சேரும் பட்சத்தில் பொதுச் செயலாளர் பதவி அல்லது பிரதித்தலைவர் பதவியை அவருக்கு வழங்க இ. தொ. கா தலைவர் தொண்டமான் முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மலையகத்தில் செல்வாக்கு பெற்றுவரும் சந்திரசேகரனை வளைத்துப் பிடிக்க தொண்டமான் இரு கோண தந்திரோபயத்தைக் கடைப்பிடித்து வருவதாக 'சண்டே ஐலண்ட்' தகவல் வெளியிட்டுள்ளது.

இ. தொ. காவின் பொதுச் செயலாளர் பதவியை வழங்கத்தாம் தயாராக இருப்பதாக தொண்டமான் தமது நெருங்கிய சகாவான இ. தொ. கா. உபதலைவர் கந்தசாமி நாயுடு மூலம் சந்திரசேகரனுக்குத் தகவல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தலின் பின் தொண்டா அமைச்சராக வாய்ப்பு

கொழும்பு, ஒக். 12

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவை ஆதரிப்பது என்று இ.தொ.கா. தீர்மானித்தாலும் தொண்டமான் அமைச்சராவது ஜனாதிபதித் தேர்தலின் பின்னரே இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொண்டமான் தமக்கு மின் சக்தி அமைச்சு, நெடுஞ்சாலைகள் அல்லது புடைவைக் கைத்தொழில் மற்றும் கிராமியக் கைத்தொழில் ஆகிய அமைச்சுகளில் ஒன்றைத் தரவேண்டும் என்று விடுத்த கோரிக்கை வெற்றியளிக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல் முடியும்வரை தமது சக அமைச்சர்களின் தீவிர ஆதரவு தேவைப்படும் தருணத்தில் பிரதமர் தொண்டமான் கோரிய அமைச்சுகளை வழங்கத் தயாராக இல்லை என்று ''சண்டே ஐலண்ட்'' தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை—

தற்போது இந்தியா சென்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



ஒட்ட வீரர்கள் எண்டதை ஓடி நிரூபிச்சப் போட்டினம்!

## அரச குழு புறப்பட முன் பிரதமருடன் ஆலோசனை

கொழும்பு, ஒக். 12

பூர்வாங்கப் பேச்சுகளை நடத்த யாழ்ப்பாணம் புறப்படுவதற்கு முன்பு அரசுப் பிரதிநிதிகள் பிரதமருடன் கலந்துரையாடுவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

முதல் சுற்றுப் பேச்சுகளின் போது எப்படி நடந்துகொள்வது, பேசப்பட வேண்டிய விஷயங்கள் ஆகியவை குறித்து அரசுப் பிரதிநிதிகளுக்குப் பிரதமர் தமது இறுதிநேர ஆலோசனைகளை வழங்குவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## பெரும் எண்ணிக்கையில் செய்தியாளர்களும் வருவர்

யாழ்ப்பாணம், ஒக். 12

அரசு — புலிகள் பேச்சுக்கள் பற்றிய செய்திகளைச் சேகரிப்பதற்காக கொழும்பில் இருந்து பெரும் எண்ணிக்கையில் வெளிநாட்டு, உள்நாட்டு செய்தியாளர்கள் கொண்ட குழு ஒன்று நாளை யாழ்ப்பாணம் வரவிருக்கிறது.

பி. பி. ஸி, ரொய்ட்டர் மற்றும் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம், கொழும்பு பத்திரிகைகள் ஆகியவற்றின் செய்தியாளர்களே இக்குழுவில் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

விமான மூலம் பலாலிக்கு வரும் செய்தியாளர்கள் காங்கேசன்துறை ஊடாக கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்துசேர ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## பேச்சை ஒட்டி படையினரின் துப்பாக்கிகளுக்கு ஓய்வாம்!

கொழும்பு, ஒக். 12

''நாளையும், நாளை மறுதினமும் வடக்கே அரச பிரதிநிதிகளுக்கும், விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கும் இடையில் இடம்பெறவுள்ள பூர்வாங்க பேச்சுவார்த்தைகளின் பொருட்டு துப்பாக்கிகளுக்கு ஓய்வு தரப்பட்டுள்ளது''

— இவ்வாறு இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் கெமுனு குலதுங்க அறிவித்திருப்பதாக அரசு தரப்புப் பத்திரிகை ஒன்று குறிப்பிட்டுள்ளது.

பேச்சுவார்த்தைகள் குறித்து அனைத்து இராணுவ நடவடிக்கைகளும் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் கடந்த வாரம் முதல் பெரியளவிலான சம்பவங்கள் எதுவும் இடம்பெறவில்லை என்றும் —

திருகோணமலையில் இருவிதமான சூட்டுச் சம்பவங்கள் மாத்திரமே இடம்பெற்றுள்ளன என்றும் —அவர் தெரிவித்தார். (உ-3)

விடுதலை புலிகளிடம்

## பிடிபட்ட கமாண்டருடன் செஞ்சிலுவையினர் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஒக். 12

''சாகரவர்த்தன'' கடற்படை கப்பல் தகர்க்கப்பட்ட சமயம் அக்கப்பலில் இருந்து விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட ஸ்ரீலங்கா கடற்படையின் கமாண்டர் அஜித் குமார பொயாகொட மற்றும் கடற்படை அதிகாரி ஆகியோரை—

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு யாழ். வதிவிடப் பிரதிநிதி மேரி பேர்கின்ஸும் அந்த அமைப்பின் பிரதிநிதிகளும் நேற்று சந்தித்தனர் என்று ''புலிகளின் குரல்'' வானொலி அறிவித்தது. (ஒ-3)

## 6 கடற்புலிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 12

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் 9 ஆம் திகதி தமிழீழக் கடற்பரப்பில் நிகழ்ந்த எதிர்பாராத மோதல் ஒன்றின்போது ஆறு கடற்புலி வீரர்கள் வீரச்சாவு அடைந்தனர் என்று நேற்று அறிவிக்கப்பட்டது

அந்த 6 கடற்புலி வீரர்களும் வருமாறு:-

★ கப்டன் நெடுமாறன் (முருகேசு தவராஜா—பொலிகண்டி)

★ கப்டன் பாரதிதாசன் (வல்லிபுரம் சிறிசங்கர்—வத்திராயன், உடுத்துறை வடக்கு)

★ கப்டன் தவநேசன் (அருணாசலம் இராமச்சந்திரன்—

(4ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு கண்காணிப்புகுழு வருகை தரும்

கொழும்பு, ஒக் 12

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிக்க வெளிநாட்டு அவதானிகளை அழைப்பதற்கு அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

## இன்று படகுச்சேவை

யாழ்ப்பாணம், ஒக். 12

கிளாலி—பூநகரி படகுச் சேவை இன்று புதன்கிழமை வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (உ-3)

## மாஹோவில் 8 ஆயிரம் பரல் ம. எண்ணெய்

யாழ்ப்பாணம், ஒக். 12

8ஆயிரம் பரல்மண்ணெண்ணையுடன் 'மாஹோ' கப்பல் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பருத்தித் துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (உ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கேர் (F) போம் பிறசியர்ஸ், சில்வர் சில்ட் சொக்ஸ் வகைகள், பெனியன்கள், நூல், எலாஸ்டிக் வகைகள், யட்டிகள் விற்பனைக்கு உண்டு. சி றி மு ரு க ன், 303, காங்கேசன்துறைசாலை, யாழ்ப்பாணம். (33284)

### கோழிக்குஞ்சு விற்பனை

ஒவ்வொரு செவ்வாயும் புதனும் நல்லின பிறிமா புறொயிலர் குஞ்சுகள் தனிச் சிவப்பு குஞ்சுகளும் விநியோகிக்கப்படும். 4 நாட்கள் வளர்ச்சியடைந்த புறொயிலர் குஞ்சு 42 ரூபா, பிலிமத் கறுப்பு வரிக் குஞ்சுகள் 30 ரூபா, தனிச்சிவப்பு குஞ்சுகள் 35 ரூபா. உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதி ஊடாக, சிங்கம் வீதி, உடுவில். (7666)

Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள். பதிவு செய்து 19-10-94 புதன் கிழமை பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (33295)

### இசை வகுப்புகள்

விஜயதசமி ஆரம்ப வகுப்புகளிற்கு சேரவிரும்புவோர் 5-10-94 (புதன்) முதல் 14-10-94 (வெள்ளி) வரை விண்ணப்பப் படிவங்களை மன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். அலுவலக நேரம் 4-30 — 6-30 (மாலை) யாழோசை, 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (33117)

### மழைப் போர்வைகள்

மழைப் போர்வைகள் (Rain Coat) சகல கலர்களிலும் கிடைக்கும். அளவிற்கேற்ப தைத்தும் கொடுக்கப்படும். ராம்சன்ஸ், சுதுமலை வடக்கு, மானிப்பாய். (7952)

### பூச்சிக்கொல்லி

பூச்சிக்கொல்லி (இன்செக்ரிடஸ்ட்) மலத்தினிலும் சிறந்தது. கறையான், எறும்பு, கொறவணன் போன்ற சகல பூச்சிகளையும் கட்டுப்படுத்த சிறந்தது. கண்ணன் கிதை, மக்கள் வங்கி முன்பாக, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-9389]

### கடிகாரங்கள் திருத்தல்

உங்கள் மணிக்கூடுகள், றேடியோக்களை சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், உங்கள் பாவித்த மணிக்கூடுகளை உதிரிப்பாகங்களுக்காக விற்றுக் கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய இடம் டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை, கண்டி வீதி சாவகச்சேரி, தலைமையகம் 284, ஸ்ரான்லி வீதி, (ஆரியகுளம் சந்தி, வானவில் அருகில்), யாழ்ப்பாணம். (சி-9386)

### தவறிவிட்டது

25-9-94 அன்று கிளாலி இறங்குதுறை பஸ் நிலையத்தில் மூன்று அடையாள அட்டைகள், போக்குவரத்து அனுமதிச் சீட்டுக்களுடனும், ஒரு தொகைப் பணத்துடனும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 25/2, B. M. C ஒழுங்கை யாழ்ப்பாணம் என்ற முகவரியில் தொடர்பு கொள்ளவும். (7953)

### தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்குகந்த நல்லரக தென்னம் நாற்றுக்கள் சாதாரணம், செவ்விளனி, வந்தாவி இனங்கள் விற்பனைக்குண்டு. மு. காங்கேசு ஐயா கடையடி, கண்டி வீதி, மீசாலை. (33222)

### சித்திர வகுப்புகள்

கலையகத்தின் புதிய சித்திர வகுப்புகள் விஜயதசமி தினத்தன்று 14-10-94 பி.ப. 3 மணிக்கு ஆரம்பமாகும். இல. 6, பென்டிக் கோஸ் வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம். (33280)

## வைத்தியசாலை கட்டடங்களை திருத்த முயற்சி

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் கட்டடத் திருத்த வேலைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வைத்தியசாலை நிர்வாகம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

திருத்த வேலைகளை ஆரம்பிப்பதற்கு கொழும்பில் இருந்து கப்பல் மூலம் சிமெந்தைத் தருவிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


**PERSONAL CLASS**

இல. 14,
சிறாம்பியடி லேன்
யாழ்ப்பாணம்.

**AL/95**

கணக்கியல்
Day Class
By: **A. S. A.**
கலைச்செல்வன்

ஆரம்பம்:
வியாழன் (13-10-94)
பிற்பகல் 12.30 மணி
(33285)



## எடிசன் அக்கடமியின் வாணி விழா

காலம்; 12-10-1994 இன்று பிற்பகல் 3 மணி
இடம்: யாழ். இந்து குமாரசுவாமி மண்டபம்

பிரதம விருந்தினர்
கம்பவாரிதி இ. ஜெயராஜ்
(அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர்)

சிறப்பு விருந்தினர்
இரா. சிவச்சந்திரன்
(சிரேஷ்ட விரிவுரையாளர் — புவியியல்துறை யாழ். பல்கலைக்கழகம்)

இணைப்பாளர்: புறநிலைப் படிப்புகள் அலகு. யாழ். பல்கலைக்கழகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

— விழா அமைப்பாளர்கள் —

(சி/9317)



எல்லாம்வல்ல சிவகாமி அம்பாளின்
பெருந்துணைக் கொண்டு
இணுவை சிவகாமி அருள்நெறி மன்றம்
நடாத்தும்

## சைவசமய பொது அறிவுப் பரீட்சை - 1994

மேற்படி பரீட்சை இன்று பிற்பகல் 3.00 மணிக்கு சகல பரீட்சை நிலையங்களிலும் நடைபெறும்.

இப்படிக்கு
இணுவை சிவகாமி அருள்நெறி மன்றம்.
சிவகாமபுரம்,
இணுவில் கிழக்கு'
இணுவில். (33303)



ஓம் ஸ்ரீராம ஜெயம்

யாழ். வண்ணை

## ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

# ★ இரதோற்சவம் ★

இன்று புதன்கிழமை 12 – 10 – 1994
காலை **8.00** மணி— வசந்த மண்டபபூஜை
பகல் **10.15** மணி — சுவாமி தேரில் எழுந்தருள்வார்

நாளை வியாழக்கிழமை 13 – 10 – 1994
தீர்த்தோற்சவம்
காலை **8.30** மணி— வசந்த மண்டபபூஜை
மு.ப. **10.15** மணி — சந்திர புஸ்கரணியில் தீர்த்தம்

இதனைத் தொடர்ந்து
திருவோணத் தீபம் மகாயாக கும்பாபிஷேகம் நடைபெறும்.

வெள்ளிக்கிழமை 14 – 10 – 1994 அன்று
பிற்பகல் **3.00** மணிக்கு
விஜயதசமி, மானம்பூ உற்சவம்
மாலை **5.30** மணிக்கு
சுவாமிக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெறும்.



இங்ஙனம்,
தேவஸ்தானம்.

[சி-9314]



## வெள்ளி விழா ஆண்டில்... BOND

நிறுவனத்தை வாழ்த்துகின்றோம்
O/L மாலை நேர வகுப்பு
— மாணவிகள்.

[33291]


## நன்றி

**09 - 10 - 1994** அன்று கிளாலி-கைதடிப் பாதையில் எம்மால் தவறவிடப்பட்ட பெறுமதிவாய்ந்த பொருள்கள் அடங்கிய கைப்பையை எமக்கு பாதுகாப்பாக கிடைக்க உதவிய யாழ். பஸ் நிலையத்தில் உள்ள மோட்டார் இருசில்லூர்தி சேவைச் சங்கத்தினருக்கு எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஆர். கணேசலிங்கம்,
சங்கானை.

(33272)

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 05 — 12 — 1970

அரக்கன் அழிப்பில்: 12 — 10 — 1987

செல்வன்
### இராசநாயகம் இராஜராஜன் (ராஜ்)
(கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவன்)

எமக்கு செய்ய வேண்டிய கடனை நாம் உமக்கு செய்கிறோம் மகனே! சாகும் வரை எம்துயர் மாறாது மகனே! இடம் எமக்குவ்வுலகில் தேடி வையும். எம் துயரம் உமைக்கண்டே ஆறும் மகனே! ஆண்டு பல ஆனாலும் இவ்வுலகில் எமக்கு ஆறுதலோ இல்லை. மகனே! ராஜ் உம் ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!!

உம் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அண்ணா.
கேரண்டாவில் கிழக்கு.

(33223)

ஓம் சாயிராம்

## விண்ணக வாழ்வில் 4ஆம் ஆண்டின் நினைவலைகள்



அன்னை மடியில்: 14 — 01 — 1935

அரக்கன் அழிப்பில்: 12 — 10 — 1990

அமரர்
### சிதம்பரப்பிள்ளை மகாலிங்கம் (மரதன் மகா)
(கணக்காய்வாளர் சிமெந்து கூட்டுத்தாபனம்)

தி: 29 — 09 — 1994

கலங்கரை விளக்கே!
களங்கமில்லா திருவுருவே!! — எம்மை
கலங்கவிட்டுச் சென்றீரோ?
ஆண்டுகள் நான்காகலாம்.......
ஆறாது எம் துயரம்
மாறாது எம் பாசம்
தெய்வமே! அப்பாவே!!
நீங்கள் இருப்பது — எம்
இதயத்தில் மட்டுமல்ல மூச்சிலும் தான்
உங்கள் நினைவே வாழ்வாக
உயிரைச் சுமக்கின்றோம்
உங்கள் ஆத்ம சாந்திக்காய்
பகவான் பாதம் பணிந்து பிரார்த்திக்கின்றோம்...

ஓம் சாந்தி! - சாந்தி!! சாந்தி!!!

உங்கள் பிரிவில் நீந்தும்:
மனைவி, பிள்ளைகள், மருமகள்.
ஆலப்பத்திரியடி,
இணுவில்.

[33296]

# இன்று நடப்பவை

வடமாராட்சி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியின் அனுசரணையுடன் கரவெட்டி பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு துன்னாலை கிராமத்தில் நடமாடும் சித்த வைத்திய சேவை நடைபெறும். [ஒ-4]

★ ★ ★

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் சமூக மேம்பாட்டுப் பிரிவின்கீழ் இயங்கும் பளை செல்வபுரம் தினேஸ் பாலர் பாடசாலையின் வருடாந்தவிளையாட்டுப்போட்டி இன்று பகல் 1.00 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும். [ஒ-117]

★ ★ ★

சுழிபுரம் ஸ்ரீ அரிஹரபுத்திர ஐயனார் ஆலய தொண்டர் சபையின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று புதன் மாலை 6 மணிக்கு ஆலய மண்டபத்தில் சபைத் தலைவர் செல்வன் கி. சுபகரன் தலைமையில் நடைபெறும். [ஒ-28]

★ ★ ★

வட வரணிக் கிராமத்தில் இதுவரை திருமணப்பதிவை மேற்கொண்டிராத 50 தம்பதியர்களுக்கு இன்று புதன் கிழமை காலை 10 மணிக்கு வடமாநில பனை தென்னை வள கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் முன்னிலையில் இலவச திருமணப் பதிவு செய்து வைக்க ஏற்பாடாகியுள்ளது. [ஒ-4]

★ ★ ★

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமம் நடத்திவரும் உலகச் சமயப் பெருவிழா நினைவு தொடர்நிகழ்வுகளில் இன்று காலை பலாலி ஆசிரிய கலாசாலையில் கருத்தரங்கு இடம்பெறும்.

''விஞ்ஞான உலகில் நம்பிக்கையும் அறிவும்'' என்னும் தலைப்பிலான இக் கருத்தரங்கில் சுவாமி சித்ரூபானந்தா உரையாற்றுவார். ஆசிரிய பயிலுநர் கலந்துரையாடலு இடம்பெறும். [அ]

★ ★ ★

யாழ். றோட்டரக்ட் கழகத்தின் ஆதரவில் நாவாந்துறை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் இன்று பகல் 1.30 மணிக்கு கருத்தரங்கு ஒன்று நடைபெற உள்ளது.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை ''கல்லூரிப் படிப்பை இடைநடுவில் நிறுத்துவோர் பிரச்சினை'' என்னும் பொருளில் உரை நிகழ்த்துவார். [அ]

## வசந்தராஜா நியமனத்துக்கு ஐவன் சிபார்சு?

கொழும்பு, ஒக் 12

ராவய ஆசிரியர் விக்ரர் ஐவனின் சிபார்சின் பேரில் தான் பி.பி.ஸி சிங்களச் சேவையின் பொறுப்பாளராக இருந்த திரு.வசந்தராஜா ரூபவாஹினியின் தலைவராக நியமிக்கப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

முதலில் வசந்தராஜாவை அரச பொதுசனத் தொடர்பு சாதனங்களின் ஆலோசகராக நியமிக்க முடிவு செய்யப்பட்டிருந்தது. பின்னர் விக்ரர் ஐவனின் தலையீடு காரணமாக எவரும் எதிர்பார்க்காத வகையில் ரூபவாஹினித் தலைவர் பதவி அவருக்கு வழங்கப்பட்டது.

ஒ-எ


## கணணிகள் தேவை

யாழ். நகரிலுள்ள தனியார் நிறுவனமொன்றுக்கு நல்ல நிலையிலுள்ள கணணிகள் தேவை.

விண்ணப்பிக்கவும்
இல. 705,
மே/பா, உதயன், யாழ்ப்பாணம்.

[சி-9313]



## வைக்கோல் விற்பனைக்கு

சிறந்த தரத்திலுள்ள வைக்கோல் விற்பனைக்குண்டு. விலை நேரில் பேசித் தீர்க்கப்படும்.

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

1. வலிகாமம்
   வருவாய்ப்பகுதிச் செயலகம்,
   பலாலி வீதி,
   கந்தர்மடம்,
   யாழ்ப்பாணம்.
2. வடமராட்சி
   வருவாய்ப்பகுதிச் செயலகம்,
   யாழ்ப்பாணம் வீதி,
   நெல்லியடி.
3. தென்மராட்சி
   வருவாய்ப்பகுதிச் செயலகம்,
   கச்சாய் வீதி,
   சாவகச்சேரி.

(சி/9315)


## ஓராண்டு நினைவஞ்சலி



மண்ணுலகு: 19 — 08 — 1938

விண்ணுலகு: 23 — 10 — 1993

### முருகேசு கந்தசாமி

பாழும் மனம் இங்கே
பரிதவித்து நிற்கையிலே
எம் அன்புத் தெய்வம்
மண்ணுலகை விட்டு விண்ணுலகு சென்று
ஈராறு மாதங்கள் ஆகுதையா
ஈரேழு ஜென்மங்கள் சென்றாலும்
எம்துயரம் தீராது.

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!! சாந்தி!! சாந்தி,

என்றும் தங்கள் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள்
தாய், சகோதரர்கள்.

நீலியப்பணை,
மல்லாகம்.

(7669)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ தயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## வெங்காய ஏற்றுமதி

தென்னிலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பெரிய வெங்காயம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்தியாவில் கடந்த மாத இறுதியில் உண்டான கொள்ளை நோய் அபாயத்தினால் இலங்கைக்கு ஒரு விது அதிர்ஷ்டம் கிடைத்திருக்கிறது! ஆம், இதுவரை இந்தியாவே பெரிய வெங்காயத்தை மத்திய கிழக்கு மற்றும் பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவந்தது. கொள்ளை நோய் அபாயம் குறித்து எச்சரிக்கப்பட்டதால், சம்பந்தப்பட்ட நாடுகள் இந்தியாவிலிருந்து வெங்காயத்தை மட்டுமன்றி, மற்றும் பல பொருள்களையும் வாங்குவதை நிறுத்திக் கொண்டன. இந்தச் சந்தர்ப்பத்தைத் தக்கவாறு பயன்படுத்தி இலங்கை தனது பெரிய வெங்காயத்துக்கு வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பைத் தேடிக் கொண்டிருக்கிறது!

தென்னிலங்கையில் குறிப்பாக மலையக மற்றும் மகாவலிப் பிரதேசங்களில் இம்முறை பெரிய வெங்காயம் அமோகவிளைச்சல் கண்டது. அதனால் சிங்கள விவசாயிகள் தமது உற்பத்தியைச் சந்தைப்படுத்த முடியாமலும், குறைந்த விலைக்கு விற்றும் நஷ்டமடைய நேரிட்டது. இந்தியாவில் கொள்ளை நோய் அபாயம் வந்ததால் சிங்கள விவசாயிகளின் கஷ்டம் நீங்கியுள்ளது!

பெரிய வெங்காயத்தை ஏற்றுமதி செய்வதற்கு ஏற்ற வாய்ப்பை நிரந்தரமாக்கிக் கொள்வது என்பது அரசாங்கத்தின் — அதன் அதிகாரிகளின் — செயல் திறமையைப் பொறுத்ததாகும்.

சுமார் இருபது வருடங்களுக்கு முன்னர் தெற்கில் வெங்காயம், மிளகாய் உற்பத்தி பெரிதாக அறிமுகமாகி இருக்கவில்லை. வடக்கு விவசாயிகளின் உற்பத்திகளே தெற்கு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தன. இதேவேளை வெங்காயம் மிளகாய் என்பன இறக்குமதியும் செய்யப்பட்டன.

வடக்கு விவசாயிகள் மிளகாய், வெங்காய உற்பத்தியில் மிகுந்த ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் ஈடுபட்டுப் பணம் சம்பாதித்ததை மறந்து விடுவதற்கில்லை. இதனைக் கண்டு பொறுக்காமல்; வடபகுதி விவசாயிகளின் வருவாயைக் குறைப்பதற்காக, அறுவடைக் காலம் பார்த்து, ஐ.தே.க. அரசு வெளிநாட்டிலிருந்து அப்பொருள்களை இறக்குமதி செய்து கேடு விளைவித்தது.

இப்போது தெற்கிலேயே இப்பொருள்கள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு, நல்ல அறுவடையும் கிடைக்கிறது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட பெரிய வெங்காய உற்பத்தியும் அதிகரித்துள்ளது. வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பும் கிடைத்துள்ளது. இந்த வகையில் சிங்களப் பகுதிகளில் விவசாயம் பெருகியுள்ளது.

ஆனால் தமிழ்ப் பகுதிகளில் விவசாயிகள் தமது தொழிலைச் செய்வதற்குரிய வசதி வாய்ப்புகள் குறைக்கப்பட்டுள்ளன. விவசாய நிலங்களை இராணுவம் ஆக்கிரமித்து அவர்களைத் தொழில் இல்லாதவர்கள் ஆக்கியுள்ளது. பசளை மற்றும் விதை போன்ற இடுபொருள்கள் கிடைப்பதில்லை.

எனினும் தமிழ் விவசாயிகள் சோர்ந்து விடவில்லை. இப்பகுதி மக்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். புதிய மாற்றுத் தொழில் நுட்பங்களைக் கையாண்டு பல பயிர்களில் நல்ல அறுவடை பெறுகின்றனர். தமிழ்ப் பகுதிகளின் சுய தேவையைப் பூர்த்தி செய்துமுள்ளனர். மேலதிக உற்பத்தியும் உண்டு.

மேலதிக உற்பத்தியை வெளியே அனுப்புவதற்கு, போக்குவரத்துத்தடைத் பெரிதும் குந்தகமாக உள்ளது. சிங்கள விவசாயிகளின் உற்பத்திக்கு ஏற்றுமதி சந்தை ஏற்படுத்திக் கொடுத்தது போல, தமிழ் விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களுக்கு புதிய அரசாவது வெளிச் சந்தை வசதி செய்யுமா? அதற்கும்; பேச்சுவார்த்தை ஆரம்பித்த பின்னர் தான் பதில் கிடைக்குமோ?!

# ஹெய்ட்டி ஜனாதிபதி பதவியை ஏற்க அரிஸ்ரைட் 15இல் நாடு திரும்புகிறார்

## இராணுவ ஆட்சியாளர் செட்றாஸ் பதவி துறப்பு

போர்ட்ஓவ் பிரின்ஸ், ஒக். 12

ஹெய்ட்டியின் இராணுவ ஆட்சியாளர் றாவுல் செட்றாஸ் பதவி துறந்ததை அடுத்து ஹெய்ட்டியின் முன்னாள் ஜனாதிபதி அரிஸ்ரைட் எதிர்வரும் சனிக்கிழமை அமெரிக்காவில் இருந்து ஹெய்ட்டி திரும்புகிறார்.

ஏற்கனவே அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டருடன் செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு இணங்க பதவியை ராஜினாமாச் செய்த செட்றாஸ் நாட்டை விட்டு வெளியேறுவதற்கும் இணங்கி உள்ளார்.

கார்ட்டருக்கும்செட்றாஸுக்கும் இடையில் தலைநகர் போர்ட் ஓவ்பிரின்ஸில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி இம்மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் செட்றாஸ் பதவி துறக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

செட்றாஸ் பதவி துறப்பதற்கு வசதியாக ஹெய்ட்டி நாடாளுமன்றம் கடந்த வாரம் சுதி செட்றாஸுக்கும் ஏனைய ராணுவத் தலைவர்களுக்கும் மன்னிப்பு அளிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றி இருந்தது.

1991 ஆம் ஆண்டு நடந்த ராணுவப்புரட்சியின் 'போது' பொதுத் தேர்தல் மூலம் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி அரிஸ்ரைட் பதவி கவிழ்க்கப்பட்டு நாடு கடத்தப்பட்டார்.

பதவி கவிழ்க்கப்பட்ட நாள் முதல் அமெரிக்காவில் தஞ்சம் அடைந்திருந்த அரிஸ்ரைட், மூன்று ஆண்டு காலத்தின் பின்னர் சனியன்று மீண்டும் ஹெய்ட்டி சென்று ஜனாதிபதியாகப் பதவி ஏற்க உள்ளார்.

அரிஸ்ரைட்டை மீண்டும் ஜனாதிபதி ஆக்குவதற்கு அமெரிக்கா மேற்கொண்ட ராஜதந்திர — ராணுவ நெருக்குதல்கள் தற்போது வெற்றி அளித்துள்ளன. (இ)

# புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் வெற்றி அளிக்கும் என்கிறார் லயனல்

விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் அரசாங்கம் நடத்தவிருக்கும் பேச்சுவார்த்தை வெற்றியளிக்கும் என்ற நம்பிக்கை எனக்குப் பூரணமாக உண்டு.

தகவல்துறை அமைச்சின் செயலாளரும் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவுள்ள அரசுப் பிரதிநிதிகளில் ஒருவருமான திரு. லயனல் பெர்னாண்டோ முன்கண்டவாறு தெரிவித்தார்.

பி.பி. ஸியின் கொழும்புச் செய்தியாளருக்கு அளித்த பேட்டியில் அவர் இந்த நம்பிக்கையை வெளியிட்டார்.

அவர் மேலும் சொன்னதாவது:

நான் யாழ்ப்பாணத்திலும், திருகோணமலையிலும் அரசாங்க அதிபராகப் பணிபுரிந்துள்ளேன். அந்தக் காலத்திலிருந்து தமிழர் — சிங்களவருக்கிடையே சமாதானம் உருவாக வேண்டும், அமைதி உருவாக வேண்டும் என்பதே என்து விருப்பமாக இருந்து வருகிறது.

அந்தக் காரணத்தினாலேயே நான் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தவிருக்கும் அரசாங்கப் பிரதிநிதிகளில் ஒருவனாகத் தெரிவு செய்யப்பட்டேன் என நினைக்கிறேன்.

பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பது எவ்வாறு, அதற்கான அடிப்படையை உருவாக்குவது எப்படி என்பது குறித்தே பேச உள்ளோம்.

ஞாயிற்றுக்கிழமை அரசாங்கத்துக்குச் சொந்தமான கப்பல் ஒன்று மூழ்கடிக்கப்பட்ட சம்பவம் —

வியாழக்கிழமை நடைபெறவுள்ள அரசு — புலிகள் பேச்சுவார்த்தைக்கு எந்த விதத்திலும் தடையாக இருக்முடியாது.

அந்தச் சம்பவத்தின் மத்தியிலும் நாம் பேச்சுவார்த்தையை நடத்தியே ஆக வேண்டும் என்பதே எனது சொந்தக் கருத்தாகும். — என்றார் (அ)

# முக்கிய பிரச்சினைகள் குறித்து பகிரங்க விவாதம் நடத்த தயாரா?

## சந்திரிகாவுக்கு ஐ. தே. க. சவால்

கொழும்பு, ஒக். 12

முக்கிய பிரச்சினைகள் குறித்து தொடர் பகிரங்க விவாதங்களை காமினி திஸநாயக்காவுடன் நடத்த முன்வருமாறு பிரதமர் சந்திரிகாவுக்கு ஐ.தே.க. சவால் விடுத்துள்ளது.

ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளர் காமினி திஸநாயக்காவின் சார்பில் அக்கட்சியின் பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகரா, பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில் விவாதம் நடத்துவதற்குரிய விஷயங்களை அவர் பட்டியல் போட்டு காட்டியுள்ளார்.

இனப் பிரச்சினை, பொருளாதாரம், வாழ்க்கைச் செலவு மற்றும் சமூக நலன்கள், கல்வி, சுகாதாரம் ஜனநாயக மனித உரிமைகள், அரசமைப்பு சீர்திருத்தம், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் ஊழல்கள் ஆகியன அப்பட்டியலில் உள்ளன. (இ—எ)

## நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம், ஒக். 12

அமரர் க. சண்முகநாதன் நினைவுப் பேருரை நிகழ்வு இன்று புதன் பிற்பகல் 3மணியளவில் வைத்திலிங்கம் துரைசுவாமி ம.ம.வித்தியாலயத்தில் நடைபெறும்.

கலாநிதி சபா. ஜெயராசா 'கல்விச் சமூகவியல்' என்ற பொருளில் உரை நிகழ்த்துவார்.

தீவகம் கணித— விஞ்ஞான ஆசிரியர் மன்றம் இதனை ஒழுங்கு செய்துள்ளது. (எ)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக். 12

தென்மராட்சிக் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று பிற்பகல் 1.45 மணி முதல் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம.வி. மைதானத்தில் நடைபெறும்.

தென்மராட்சி கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி புஷ்பா கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக யாழ். தெற்கு கல்வி வலயத்தின் உடற்கல்விக்குப் பொறுப்பான உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. ரி. அருணகிரிராஜா கலந்துகொள்வார்.

பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ 15 வயதுப் பிரிவு:- சந்திரபுர ஸ்கந்தவரோதயா ம.வி. எதிர் சாவகச்சேரி இந்து.

★ 17 வயதுப் பிரிவு:- டிறிபேர்க் எதிர் சாவகச்சேரி இந்து.

★ 19 வயதுப் பிரிவு:- டிறிபேர்க் எதிர் சாவகச்சேரி இந்து. (உ)

# கூட்டுறவு ஊழியருக்கு நிரந்தர ஆணைக்குழு

நிரந்தரமாக கூட்டுறவு சேவை ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது என்று அமைச்சர் அமரசிறி தொடங்கொட தீர்மானித்துள்ளார்.

இந்த ஆணைக்குழுவே இனிமேல் நாடு முழுவதற்கும் ஏற்றமுறையில் கூட்டுறவுத் துறை ஊழியர்களின் நியமனம், இடமாற்றம் ஆகியவற்றை மேற்கொள்ளும் என அறிவிக்கப்படுகிறது.

நாட்டில் சுமார் 40 ஆயிரம் கூட்டுறவுத்துறை ஊழியர்கள் உள்ளனர் அவர்களின் நன்மைகருதியேஇந்தஆணைக் குழு நியமிக்கப்படுவதாகவும் அமைச்சர் தொடங்கொட தெரிவித்தார்.

இதே வேளை — கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து மொத்த விற்பனை வரி அறவிடப்படுவதை ரத்துச் செய்யும் படியும் அரசுக்கு அமைச்சர் சிபார்சு செய்துள்ளார். (எ—6)

## சமாதான நோபல் பரிசு அரபாத், ராபினுக்கு!

இவ்வாண்டுக்கான சமாதான நோபல் பரிசு பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாசிர் அரபாத்துக்கும் இஸ்ரேல் பிரதமர் ரபீனுக்கும் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

மத்திய கிழக்கு பிரச்சினையில் பகைமையை முடிவுக்குக் கொண்டு வந்து வரலாற்றுப் புகழ்பெற்ற சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதற்காக இந்த சமாதானப் பரிசு அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

இவ்விருது வெள்ளிக்கிழமை வழங்கப்படவிருக்கிறது:

சமாதானத்துக்கான நோபல் பரிசை பெறுபவரின் பெயரை சிபார்சு செய்யும் குழுவின் அங்கத்தவர்களுள் ஒருவர் யாசிர் அரபாத்துக்கு இப்பரிசு வழங்குவதை ஆட்சேபித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ—4)

# 4 வார நிவாரணம் ஒருமித்து வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 12

இடம்பெயர்ந்தவர்களுக்கான— ஆவணி மாதத்திற்குரிய — நான்கு வாரங்களுக்குமான — பொருள்களை ஒருமித்து வழங்குவதற்கு யாழ். செயலக புனர்வாழ்வுப் பகுதியினர் தீர்மானித்துள்ளனர்.

இதற்கான பொருள்கள் 'கோமாரி' கப்பலில் இருந்து தற்போது இறக்கப்பட்டு வருகின்றன.

ஆவணி மாத முதல் இரு வாரங்களுக்கும் அரிசி, சீனி, லக்ஸ்பிறே, சன்லைற், லக்ஸ் என்பவற்றுடன் ஒருவருக்கு மேற்பட்ட [illegible]ளைக் கொண்ட குடும்பம் ஒவ்வொன்றுக்கும் மல்லியும், மூவருக்கு மேற்பட்ட அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு சவ்வரிசியும் வழங்கப்பட உள்ளன.

கடைசி இருவாரங்களுக்கும் அரிசி, சீனி, சிந்தாமணிக் கடலை, தேயிலை, சன்லைற், றெக்சோனா, ரானி, சோப்பும் —

மூன்றுக்கு மேற்பட்டோரை அங்கத்தவர்களாகக் கொண்ட குடும்பம் ஒன்றிற்கு [illegible] வழங்குவதற்கு ஏற்பாடாகியுள்ளது. [illegible]

## புலிகளின் குரல் வானொலியில்

12 — 10 — 1994

புதன் இரவு

★ 8-01 — குயிலோசை நிகழ்ச்சியில் ப. புவனேஸ்வரி எழுதிய ''கிராமியப் பாடல்களில் பெண்களின் பங்கு''கிராமிய நிகழ்வு.

★ 8-20 — ஏர்முனை நிகழ்ச்சியில் ''வயலுக்குப் போவோம்'' தனி நடிப்பு

★ 8-30 — செய்திகள்

★ 8-40 — லெப்டினன்ட் கேணல் விக்ரர் நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ''நான் கண்ட தளபதி விக்ரர்''

13— 10 — 1994

வியாழன் காலை

★ 7-02 — மாவீரவணக்கம்

★ 7-15 —விடுதலை கீதங்கள்

★ 7-30 — செய்திகள்

★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்

★ 7- 40—விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## ஆலயங்களில்

எழுதுமட்டுவாழ் சிவன் கோயில் கேதார கௌரி விரத புரட்டாதி கடைசிச் சனிவார நவக்கிரக ஹோம விழா 14 ஆம் திகதி முதல் 3.11.94 வரை 21 தினங்கள் நிகழும். 15 ஆம் திகதி புரட்டாதி சனி வாரத்தை முன்னிட்டு காலை 9 முதல் 12 மணிவரை சனீஸ்வர பெருமானுக்கும் ஏனைய கிரக தேவர்களுக்கும் விசேட பூசை நடைபெறும். (க)

## கப்பலில் செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 12

கொழும்பில் சிகிச்சை பெறுவதற்காக தெரிவு செய்யப்பட்டு கப்பலில் செல்ல உள்ள நோயாளர்களையும், கூடச் செல்பவர்களையும் நாளை வியாழன் காலை 7 மணிக்கு யாழ். போதனா வைத்திய சாலைக்கு சமுகம் கொடுக்கும் படியும் —

இரண்டு நாட்களுக்குத் தேவையான உணவு மற்றும் குடிதண்ணீருடன் வருமாறும் வைத்தியசாலைப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ—15)

## மூழ்கடித்த கப்பல் பெறுமதி ரூ. 10 கோடி

கொழும்பு, ஒக். 12

கடந்த ஞாயிற்றுக் கிழமை வெற்றிலைக்கேணி கடற்பரப்பில் விடுதலைப் புலிகளால் தாக்கி மூழ்கடிக்கப்பட்ட ஓஷன் ரேடர் கப்பலின் முழுப்பெறுமதி சுமார் 10 கோடி ரூபா என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (ஒ—எ)

## பரீட்சை முடிவு வெளியானது

யாழ்ப்பாணம், ஒக். 12

பலாலி ஆசிரிய கலாசாலையின் 1992-1993 ஆசிரியருக்கான இறுதிப் பரீட்சையின் முடிவுகள் வெளியாகியுள்ளன. பரீட்சைக்குத் தோற்றியோர் தங்கள் பெறுபேறுகளை கலாசாலையில் பார்வையிடலாம். [உ]

## மானிப்பாயில் வெள்ளம்

யாழ்ப்பாணம், ஒக். 12

நேற்றுக்காலை முதல் வலிகாமம் பகுதியில் தொடர்ந்து பெய்த மழையால் தாவடி, கொக்குவில், நந்தாவில், மானிப்பாய் பகுதிகளில் வெள்ள நிலை ஏற்பட்டது.

வெள்ளத்தால் அப்பகுதி மக்கள் பலர் இடம்பெயர்ந்தனர். [உ—3]

## காலியிலும் மனிதப் புதைகுழி

கொழும்பு, ஒக் 12

காலி கப்புகேம்பலவில் மனித புதைகுழி ஒன்று நேற்றுக் காலி பிரதம நீதிவான் சரத் டி ஆங்கு முன்னிலையில் தோண்டப்பட்டபோது மனித எலும்புக் கூடுகள் மற்றும் அரைகுறையாக எரிந்த நிலையில் உடுதுணிகள், ரயர்கள் என்பன கண்டுபிடிக்கப் பட்டதாக அறிவிக்கப் படுகிறது. [உ—4]

## ஹெலி வேட்டு

யாழ்ப்பாணம், ஒக். 12

நேற்று மாலை தென்மராட்சிப் பகுதியில் ஹெலி ஒன்று 50 கலிபர் தாக்குதல் நடத்தியது. (ஒ—3)

# கோமாரியில் 2 தடவைகள் திருமலையிலிருந்து மா

யாழ்ப்பாணம், ஒக். 12

தற்சமயம் பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கிக் கொண்டிருக்கும் 'கோமாரி' கப்பல்மூலம் இரு தடவைகள் திருகோணமலையில் இருந்து குடாநாட்டுக்கு தேவையான மாவை எடுத்துவர ஏற்பாடாகியுள்ளது.

குடாநாட்டில் மாவின் பாவனை அதிகரித்துள்ளதாலும்—

மழைகாலம் நெருங்குவதால் போதிய அளவு மாவை கையிருப்பில் வைப்பதற்காகவும்—

மொத்தம் ஆறாயிரம் மெற்றிக் தொன் மாவை மேற்படி கப்பலில் எடுத்து வர யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு ஏற்பாடுகள் செய்துள்ளது.

இக்கப்பல் பெரும்பாலும் நாளை மறுதினத்துக்குள் பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடித்துவிட்டு மா ஏற்றிவர திருமலைக்குப் புறப்படும். (உ—3)

# ராணுவ பிடியில் சிக்கிய 4 பேர் நேற்று விடுதலை

யாழ்ப்பாணம், ஒக். 12

கடந்த நான்கு வருடங்களுக்கு முன் தையிட்டியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இளவாலை, மாதகல் பகுதிகளில் இராணுவத்தின் பிடிக்குள் சிக்கிக் கொண்டவர்களில் மூவரும்—

கடந்த செவ்வாய்க்கிழமை பண்டத்தரிப்புப் பகுதியில் மாடு மேய்க்கச்சென்றபோது இராணுவத்திடம் பிடிபட்ட ஒருவரும் நேற்று விடுவிக்கப் பட்டுள்ளனர்.

தையிட்டி சேகரம் ஒழுங்கையைச் சேர்ந்த இ. போ. ச. பஸ் சாரதி பொன்னம்பலம் துரைச்சாமி (வயது 55), அவரது உறவினர் ஆறுப்பிள்ளை சின்னையா (வயது 75), இளவாலையைச் சேர்ந்த செல்வராசா (வயது 37), பண்டத்தரிப்பில் [illegible] வரான ராஜன் (வயது 37) ஆகிய நால்வருமே நேற்று விடுவிக்கப்பட்டவர்கள் ஆவர்.

கப்பலில் பருத்தித்துறை மூலம் இவர்கள் வந்து சேர்ந்தனர். (ஓ-15)

# ஹேமாவின் நியமனம் ரணிலுக்கு அதிருப்தி!

கொழும்பு, ஒக். 12

கொழும்பு மத்தி ஐ. தே.க. அமைப்பாளராக ஹேமாவை நியமித்திருப்பது குறித்து ரணில் விக்கிரமசிங்க அதிருப்தியடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

ரணில் கொழும்பு மாவட்ட ஐ. தே. க. அமைப்பாளராக இருக்கிறார். அவரை ஓரங்கட்டும் முயற்சியாகவே ஐ. தே. க. தலைமைப்பீடம் ரணிலிடம் கலந்தாலோசிக்காமல் ஹேமா பிரேமதாஸாவை கொழும்பு மத்தி அபைப்பாளராக நியமித்தது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை—

பஞ்சிகாவத்தையில் ஹேமா ஒழுங்கு செய்த ஐ. தே. க. பிரசாரக்கூட்டம் குறித்து ரணிலுக்கு முறையாக அறிவிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# மின்சாரம் வந்தாலும் வீதிவிளக்கு இருக்கும்

யாழ்ப்பாணம், ஒக். 12

மின்சாரம் வந்தாலும் வீதி விளக்குத் திட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கும்.

யாழ். மாநகராட்சி மன்றத்தின் பதில் ஆணையாளரும் மின்சார பொறியியலாளருமான வே நவரத்தினராசா இதனைத் தெரிவித்தார்.

மின்சாரம் வந்தால் முதலில் சுழற்சி முறையில் மின்சாரத்தை வழங்குவதற்கே மின்சாரசபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதனாலேயே வீதி விளக்குத் திட்டம் தொடர்ந்து அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-17)

# கல்முனை கடற்பகுதியில் மூழ்கிக் கிடக்கும் படகு

குருநகர், ஒக். 12

பூநகரி — கல்முனை கடற்பகுதியில் சுமார் 47 அடி நீளமான பிளாஸ்ரிக் படகு ஒன்று நீரின் ஆழத்தில் மூழ்கிக் கிடப்பதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடலட்டை பிடிப்பதற்காக கடலின் அடிவரை சுழியோடிய மீனவர்கள் மேற்படி படகு மூழ்கிக்கிடப்பதைக் கண்டுள்ளனர்.

பூநகரி, நாகதேவன்துறைக் கூட்டுப்படை முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய 'தவளை' நடவடிக்கையின் போது மூழ்கடிக்கப்பட்ட கடற் படையினரின் படகுகளில் ஒன்றாக இது இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (ஐ-51)

# இந்து பாடசாலைகளுக்கு வெள்ளிவிடுமுறைவழங்குக

## இந்து இளைஞர் பேரவை கோரிக்கை

வெள்ளிக்கிழமைகளில் இந்து சமயப்பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்படவேண்டும். அன்றைய தினம் அரச ஊழியருக்கு 2 மணி நேர வழிபாட்டு உரிமை வழங்கப்பட வேண்டும்.

யாழ். ம வட்ட இந்து இளைஞர் பேரவை நேபாள மன்னருக்கும், இந்து சமய மக்கள் பரந்து வாழும் நாடுகளின் தலைவர்களுக்கும் மற்றும் ஐ நா. (கல்வி, கலாசாரப் பிரிவு) பொதுச்செயலாளருக்கும் இவ்வேண்டு கோளை அனுப்பி வைத்துள்ளது.

இம்மாதம் 21 ஆம் திகதி முதல் இக்கோரிக்கைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும் படியும் வேண்டுகோளில் கோரப்பட்டுள்ளது. (எ)

## வந்திடுவாய் தேரினிலே வேங்கடவா!

வேங்கடவன் வீதியிலே தேரோட்டம்
வண்ணையம் பதியினிலே திருக்கூட்டம்;
வேண்டியதை வழங்கிடவே வீதியிலே
வாறானாம் தேரினிலே வேங்கடவன்!

திருப்பதியில் குடிகொண்டான் வேங்கடவன்
திருவண்ணை நகர்தனிலே வரதனவன்
தீர்த்திடவே தீமைகளைத் திருமாலாய்
தேரினிலே வந்திடுவான் வேங்கடவன்!!

ஈழமதைக் காத்திடவே ஆதிசேடனில்
இறைவா நீ பள்ளிகொள்வ தெம்பேறே
ஈன்றிடவே வரமதனை நம்மவர்க்கு
வந்திடுவாய் தேரினிலே வேங்கடவா!!!

— வண்ணை. சே. சிவராஜா

(வண்ணை [illegible] பெருமாள் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்றாகும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.தே.க. வென்றால் தேசிய அரசாங்கம்

## காமினி திஸநாயக்கா கூறுகிறார்

கொழும்பு, ஒக்.12

தாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டினால் வடக்கு-கிழக்கு பிரச்சினை உட்பட நாட்டின் பிரதான பிரச்சினைகளுக்குத் தீர்வு காண தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்கும்படி அழைப்பு விடுக்கப்போவதாக ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் காமினி திஸநாயக்கா அறிவித்திருக்கிறார்.

நிரந்தரமாக மாற்றம் செய்யப்படாத அரசமைப்பு ஒன்றை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு உருவாக்க விரும்பினால், ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவை அது பெற்றேயாக வேண்டும் என்றும் அவர் கூறினார். (இ-எ)


அருள்மிகு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

சாவகச்சேரி

13-10-1994 வியாழக்கிழமை விஜயதசமியை முன்னிட்டு

காலை வித்யாரம்பமும்

பிற்பகல் 3மணிக்கு விஜயதசமி

மானம்பூ விழாவும்

கேதார கௌரி விரத ஆரம்பம்

விரதம் அநுட்டிப்பவர்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவும்.

★ அனைவரும் வருக! அன்னை அருள் பெறுக!! ★

இங்ஙனம்,

ப. மகாகணபதிசர்மா,

தர்மகர்த்தா.

[33293]


## மரண அறிவித்தல்கள்

### இராமுப்பிள்ளை வேலாயுதர் இராமசுவாமி

(முன்னைநாள் விதானையார் அச்சுவேலி, அச்சுவேலி தெற்கு, தோப்பு ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவில் பரிபாலனசபைத் தலைவர்)

இராமுப்பிள்ளை வேலாயுதர் இராமசுவாமி இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், பகவதி (U.K), திலகவதி, திருநாவுக்கரசு (அபிராமி பெஷன் கவுஸ் சுன்னாகம்), கலாவதி (ஓமான்), விவேகவதி (இந்தியா), புனிதவதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஹரிதாஸ் (U.K), மதுநீதி (ஓமான்), சிவபாலன் (இந்தியா), வசந்தாதேவி, இராஜலிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், கணபதிப்பிள்ளை, பொன்னம்பலம், கந்தையா ஆகியோரின் சகோதரரும், கனகசபாபதியின் மைத்துனரும், கணேசரத்தினத்தின் சகலனும், சுரபி, கேசி, இரஜித்தா, ஆதவன், ஜனாகரன், மதுகரன் ஆகியோரின் பேரனுமாவார்.

இறுதிக்கிரியைகள் 12-10-94 இன்று புதன்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அச்சுவேலி தெற்கு இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

இ. திருநாவுக்கரசு

(மகன்)

(33302)

### திருமதி அன்னம்மா பீதாம்பரம்

ஊரங்குணையைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோயிலடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான அன்னம்மா பீதாம்பரம் 8 - 10 - 94 அன்று காலமானார்.

இவர் பீதாம்பரத்தின் (பற்குணம், யாழ். பொதுசன நூலகம்) அன்பு மனைவியும், கருணாநிதி (சாயி போட்டோ) சிவஅன்பு (நில அளவைத் திணைக்களம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தையா, திருமதி யோகம்மா (கால்நடை வைத்தியசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரியின் அன்பு மாமியாரும், சாயிசங்கரின் அன்புப் பேர்த்தியாரும், நடராசா, தவநாதன், திருமதி கோ. சிவசக்தி ஆகியோரின் மைத்துனியும், திருமதி த. சந்திராதேவியின் சகோதரியும், இராசேந்திரன் கௌசி, சிவசக்தி, தர்சினி ஆகியோரின் பெரியம்மாவும், திருமதி த. நாகரத்தினத்தின் மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (12-10-94) காலை 10 மணியளவில் நாச்சிமார் கோயிலடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;

பி. கருணாநிதி

(மகன்)

சாயி போட்டோ,
1010 / 17, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோவிலடி, யாழ்.

(33301)

### திருமதி சின்னப்பிள்ளை வேலன்

அளவெட்டியைச் சேர்ந்தவரும், தற்போது உடுவிலில் வசித்துவந்தவருமான சின்னப்பிள்ளை வேலன் 10.10.94 இல் சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வலன் அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற வயிரமுத்து பாக்கியம், மற்றும் முருகேசு ஆகியோரின் தாயாரும், மார்க்கண்டு [கிளிநொச்சி] சின்னமணி ஆகியோரின் மாமியாரும், உதயகுமாரன் [ஜேர்மனி], சூரியபாலா (சுவிஸ்) சந்திரன், செல்வதி, கோமதி, ரேவதி, ஈசன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 11.10.94 நேற்று உடுவிலில் நடைபெற்று அளவெட்டி மணற்புலம் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

ம. சௌசுப்பிரமணியம்

(சந்திரன்)

ஆர்க் லேன்,
உடுவில்.

[33300]

### தென்மராட்சியில் மின்னல் தாக்கியது

தென்மராட்சி, ஒக். 12

கடந்தவாரம் பெய்த பெருமழையின்போது தென்மராட்சியின் பல இடங்களில் மின்னல் தாக்கியது.

கொடிகாமம் கோயிலாமனையில் இரு வீடுகளில் இடிவீழ்ந்தது.

தென்னை மரத்தின் மீது வீழ்ந்த இடியினால் தென்னையின் மேற்பகுதி சேதமடைந்தது.

குடை பிடித்துக்கொண்டு சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவரும் மின்னலினால் தாக்கப்பட்டார். (இ-117)

### தப்பியிருந்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகக் காணப்படுகின்றனர். அடிக்கடி நாம் தங்கியிருக்கும் பகுதிகளுக்கு வரும் படையினர் நீங்கள் சந்திரிகா பக்கமா யு.என்.பி. பக்கமா என்று கேட்டு இம்சைப்படுத்துகின்றனர்.

இராணுவ நடவடிக்கையின் போது சேதமடையாது தப்பியிருந்த கட்டடங்களை அவர்கள் புல்டோசர்கள் கொண்டும் குண்டு வைத்தும் தகர்த்து வருகின்றனர்.

அப்பகுதிகளில் காணப்பட்ட வேலிகள் யாவற்றையும் வெட்டி தீ வைத்து [illegible]து வருகின்றனர். மயிலிட்டி, தையிட்டியிலிருந்து கிழக்கே பலாலி வரையும் மேற்கே காங்கேசன்துறை தெற்கே அம்பனை, பெரியவிளான் பகுதிகள் வரையும் இந்த அழிப்பு வேலைகள் நடத்தப்பட்டன.

சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாடுகள் இராணுவத்தினரால் சுட்டுத் தள்ளப்பட்டன.

**அணை கட்டுகின்றனர்**

காங்கேசன்துறை மயிலிட்டி பலாலிப் பகுதிகளை உள்ளடக்கி கரையோரப் பக்கமாக, சுமார் அரை மைல் தூரம் உள்பக்கமாக நிலத்தை அகழ்ந்து எடுத்து பாரிய அணை ஒன்று அமைத்து வருகின்றனர். அணை கட்டுவதற்காக மண்ணை அகழ்ந்தெடுக்கும் பகுதிகள் பெரிய பள்ளங்களாகக் காட்சியளிக்கின்றன.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் மாதகல், இளவாலைப் பகுதிகள் மட்டும் அழிப்பு வேலைகள் நடைபெறாது எஞ்சியுள்ளன.

இளவாலைப் பகுதியில் பிடிபட்டிருப்பவர்களில் ஒருவர் இராணுவத்தினரால் நையப் புடைக்கப்பட்டு ஆபத்தான நிலையில் இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டிருந்தார்.

இளவாலைப் பகுதியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் (வயது 35) என்பவரே அங்கிருந்து கொண்டு விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாகக் கூறி தாக்கப்பட்டவர் ஆவார். இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஒ-15)

### ஸ்ரீலங்காவின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகிக்கப்படுகிறது.

காணாமல்போன ஸ்ரீலங்கா வீரர்களில் ஒருவர் 800 மீற்றர் ஓட்டக்காரர். மற்றைய மூவரும் சைக்கிள் ஓட்ட வீரர்கள்.

ஸ்ரீலங்கா வீரர்கள் நால்வரும் தலைமறைவாகியுள்ள போதிலும் அவர்களின் கடவுச் சீட்டுக்கள் அணிக்குப் பொறுப்பான அதிகாரி வசமே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொரு விளையாட்டு வீரருக்கும் தினசரி கொடுக்கப்படும் செலவுத் தொகையைத் தமது அணித் தலைவரிடமிருந்து முற்பணமாகப் பெற்று கடைக்குப் பொருள்களை வாங்கச் செல்வதாகக் கூறி இவர்கள் வெளியே சென்றனர்; ஆனால் பின்னர் திரும்பி வரவில்லை.

தலைமறைவானதாகக் கருதப்படும் ஸ்ரீலங்கா வீரர்கள் நால்வரையும் கண்டுபிடிக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் பிடிபடும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்படும் என்று ஸ்ரீலங்கா வீரர்களின் அணித் தலைவரான ரோய்ஸ் டீ சில்வா தெரிவித்தார்.

அண்மையில் கனடாவில் நடந்த பொது நல அமைப்பு நாடுகள் விளையாட்டுப் போட்டியின் போதும் ஸ்ரீலங்கா வீரர் ஒருவர் அங்கு தலைமறைவானவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-இ-[illegible])

# ஆனையிறவிலிருந்து கிளிநொச்சிக்கு 18,000 துருப்புகள் முன்னேற திட்டம்!

## கைவிடப்பட்ட "வானவில் நடவடிக்கை" குறித்து தகவல்

கொழும்பு, ஒக். 12

அரசாங்கத்தின் உத்தரவின் மீது இராணுவத்தினரால் கைவிடப்பட்டதாகக் கூறப்படும் பாரிய தாக்குதல் இம்மாதம் முதலாம் திகதி மேற்கொள்ளப்படவிருந்ததாகவும் —

இந்த நடவடிக்கைக்கு 'ஒபரேஷன் வானவில்' [Operation Rainbow] என்று பெயரிடப்பட்டிருந்ததாகவும் "சண்டே லீடர்" தகவல் வெளியிட்டிருக்கின்றது.

ஆனையிறவு முகாமின் தெற்குப் பகுதி முன்னணி பாதுகாப்பு நிலைகள் ஊடாக 18 ஆயிரம் துருப்புகள் எட்டு மைல் தூரம் முன்னேறிச் சென்று கிளிநொச்சியைப் பிடிப்பதே 'ஒபரேஷன் வானவில்' இராணுவ நடவடிக்கையின் நோக்கம் என்று 'சண்டே லீடரில்' அதன் இணை ஆசிரியர் இக்பால் அத்தாஸ் எழுதியிருக்கிறார்.

இந்த இராணுவ நடவடிக்கைக்கான தயாரிப்பு வேலைகளை படையினர் ஆறு வாரங்களாக மேற்கொண்டிருந்தனர்.

இலங்கை இராணுவத்தின் மிகப்பெரிய தாக்குதலாக இது அமையவிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நடவடிக்கைக்கு மேஜர் ஜெனரல் ஏ. எம். யு. செனவிரத்னா தலைமை வகிக்க இருந்தார். இராணுவத்தின் இரண்டாம் டிவிஷனின் கட்டளைத் தளபதியான இவர் கடந்த மாதம் தான் அனைத்துப் படைகளின் தளபதியாகவும் நியமிக்கப்பட்டிருந்தார்.

இத்தாக்குதலை ஆரம்பிப்பதற்கு ஒருவாரம் இருக்கக் கூடியதாக அரசு தாக்குதலை நிறுத்தும் உத்தரவைப்பிறப்பித்தது.

இம்மாத இறுதியில் பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பிப்பதற்கு முன்னர் 'ஒபரேஷன் ரெயின்போ' நடவடிக்கையை முடிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சியில் குறைந்தது 16 கிலோ மீற்றர் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவே துருப்புகள் திட்டமிட்டிருந்தனர்.

அரசின் இடைநிறுத்த உத்தரவை அடுத்து, வடக்கு—கிழக்கின் பல முனைகளில் இருந்து கொண்டு வரப்பட்ட காலாட் படையினர் மற்றும் ஆட்டிலறிபடையினர் போர்த் தளபாடங்களுடன் படிப்படியாக ஆனையிறவு முகாம் மற்றும் வெற்றிலைக்கேணித் தளங்களில் இருந்து வெளியேற ஆரம்பித்தனர் என்றும் "சண்டே லீடர்" செய்தி வெளியிட்டிருக்கிறது.

### தேர்தலின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றிருக்கும் தொண்டமான் நாடு திரும்பியதும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் சேரத் திட்டமிட்டுள்ளார் என்றும்—

அவருக்கு ஸ்ரீமனி அத்துலத்முதலியின் அமைச்சு வழங்கப்படும் என்றும்—

மற்றொரு பிரதி அமைச்சர் பதவியும் இ. தொ. காவுக்கு தரப்படும் என்றும்—

ஸ்ரீமனி அத்துலத் முதலி, சி.வி. குணசேகரா ஆகியோருக்கு புதிய அமைச்சுகள் வழங்கப்படும் என்றும்—

"லக்பிம" சிங்கள வார இதழ் தெரிவித்துள்ளது. (உ-எ-9)

### அரசு-புலிகள்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கட்சிக்கும், நிறைவேற்று அதிகாரம் ஒரு கட்சிக்கும் இருந்தால் இவ்வாறான நிலைமைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும். தனிப்பட்டவிதத்தில் நான் சண்டை போடுவதற்கு விருப்பம் இல்லாதவன்.

"நான் இப்போது கட்சியின் பிரதிநிதி என்பதைவிட கூடுதலான அளவு மக்களுக்குச் சொந்தமான ஜனாதிபதியாகவே இருக்கிறேன். எனவே நான் நடுநிலையாகச் செயலாற்றுகிறேன். அதனால்தான் நான் அரசின் அலுவல்களுக்கு ஆதரவு தருகிறேன்" — என்றார்

கேள்வி: பொதுத் தேர்தலில் ஐ. தே. க. தோல்வியடையக் காரணம் உங்களது இனவாதப் பேச்சுத்தான் என உங்கள் கட்சியில் உள்ள பலர் கூறிஇருக்கிறார்களே!

பதில்: எங்கள் கட்சி சகல இனத்தவர்களுக்கும் சொந்தமான கட்சி. அதேபோல் ஜனநாயகக் கட்சியும் ஆகும். [ஒ-9]

### 6 கடற் புலிகள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

★ லெப். பரந்தாமன் (கைதடி பொன்கலன் அன்ரனி லிவிங்ஸ்டன்—புலோலி கிழக்கு)

★ லெப். கிரன் (கனகசபை சுமந்திரன்—சித்தங்கேணி)

★ லெப். வர்மன் (இரத்தினம் மதிவர்மன்—அளவெட்டி வடக்கு) (ஒ)

### சந்திரசேகரனை...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனுப்பினாராம்.

சில தினங்கள் கழித்து இன்னொரு தகவலை சந்திரசேகரனுக்கு தொண்டமான் தூதர் ஒருவர் ஊடாக அனுப்பினாராம்.

இ.தொ.காவில் புதிதாக பிரதித் தலைவர் பதவி ஒன்று உருவாக்கப்பட்டு அதற்கு சந்திரசேகரன் நியமிக்கப்படுவார் என்பதே அந்தத் தகவலாகும். தலைவர் பதவி வகிப்பவருக்கு உள்ள அதிகாரங்களுக்கு சமமான அதிகாரங்கள் பிரதித்தலைவருக்கும் வழங்கப்படும் என்றும் தொண்டமான் கூறியுள்ளார்.

றும் கூறியுள்ளார்

ஒரு கல்லில் இரு மாங்காய்களை விழுத்தும் தந்திரமாக இது அமைந்துள்ளது என்று அவதானிகள் தெரிவித்தனர்.

தொண்டமானின் இப்பேரம் குறித்து மலையக மக்கள் முன்னணியின் தலைமைப்பீடம் சந்தேகப்படுவதாக 'சண்டே லண்டன்' [illegible] (உ-எ)

### 52பேர் கைது

கொழும்பு, ஒக். 12

சட்ட விரோதமாக துப்பாக்கிகள் வைத்திருந்த 52 நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

### பிரசார கூட்டங்கள்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஹட்ஸன் சமரசிங்கா சிங்கள மகாசம்மத பூமி புத்ர கட்சி வேட்பாளரான சட்டத்தரணி ஹரிச்சந்திர விஜேதுங்க ஆகியோர் இன்னும் சில தினங்களில் தங்கள் பிரசாரக் கூட்டங்களை ஆரம்பிக்க விருக்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (எ-க)

### நூலக சேவை

யாழ்ப்பாணம், ஒக். 12

யாழ். வைத்தியசாலை கூட்டுறவு நலவிருத்திச்சங்கம் அங்கத்தவர்களுக்கான இரவல் வழங்கும் நூலகசேவை ஒன்றை ஆரம்பித்துள்ளது. (இ-15)

## திறைசேரியில் 3 ஆயிரம் கோடி ரூபாவைக் காணோம்

# தனது சுகவீனத்தைக் காரணம் காட்டி நாடு திரும்ப பாஸ்கரலிங்கம் மறுப்பு

கொழும்பு, ஒக். 12

சுகவீனம் காரணமாக நாடு திரும்ப முடியாத நிலையில் இருப்பதாக நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் இராமலிங்கம் பாஸ்கரலிங்கம் லண்டனில் இருந்து அறிவித்துள்ளார்.

திறைசேரியில் இருந்த பணத்தில் 3 ஆயிரம் கோடி ரூபாவுக்கு கணக்குக் காட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் பதவியையும் வகிக்கும் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா வெளியிட்டிருக்கும் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில், திரு. பாஸ்கரலிங்கத்தின் இக்கடிதம் அரசுக்குக் கிடைத்திருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' தகவல் வெளியிட்டுள்ளது.

அப்போதைய திறைசேரிச் செயலாளர் என்ற வகையில் திரு. பாஸ்கரலிங்கம் தான் இக்குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கவேண்டியவராக உள்ளார் என்றும் அரசு வட்டாரங்கள் கூறின.

திறைசேரியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஒழுங்கீனங்கள் விசாரணை செய்யப்பட்டு வருகின்றன. பின்னர் சட்டத்தரணிகளின் ஆலோசனை பெறப்படும் என்று புதிய திறைசேரிச் செயலாளர் ஏ. எஸ். ஜெயவர்த்தனா கூறினார்.

பாஸ்கரலிங்கம் நாடு திரும்பும் சாத்தியம் பற்றி கருத்துத் தெரிவிக்க திரு. ஜெயவர்த்தனா மறுத்துவிட்டார்.

அவரை பிரிட்டனில் இருந்து நாடு கடத்துவது என்ற கேள்விக்கே இடமில்லை. இந்தியாவுடன் செய்து கொண்டது போன்று பிரிட்டன் இலங்கையுடன் நாடு கடத்தும் உடன்படிக்கையை இன்னும் செய்து கொள்ளவில்லை என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-எ)

### முதல் கூட்டம் நுகேகொடையில்

கொழும்பு, ஒக். 11

ஸ்ரீலங்கா முற்போக்கு முன்னணி தமது ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தை எதிர்வரும் வியாழக்கிழமை ஆரம்பிக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலாவது பிரசாரக் கூட்டம் நுகேகொடையில் நடைபெறும்.

நிஹால் கலப்பதி ஸ்ரீ. மு. மு. வேட்பாளராக போட்டியிடுகின்றார். (எ-க)

### மீன்பிடிக்க தடை

அதிசக்தி மிக்க மின் ஒளியைப் பாய்ச்சி மீன் பிடிக்கும் முறை விரைவில் தடை செய்யப்படும்.

இதற்கான சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட இருப்பதாக மீன்பிடி, கடல் வளத்துறை அமைச்சர் இந்திக குணவர்த்தன தெரிவித்தார்.

# பேச்சுக்கு இந்தியா....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிற்கப்போவதில்லை என்று இந்தியா கோடிகாட்டியுள்ளது"— என்று தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப் போவதாக இலங்கை அரசு ஆரம்பத்தில் அறிவித்ததை அடுத்து, இரு அரசாங்கங்களுக்கும் இடையே அந்தரங்க ஆலோசனைகள் நடத்தப்பட்டன.

**ஆரம்பத்தில் இந்தியா எதிர்ப்பு**

ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தப்படுவது குறித்து இந்தியா எதிர்ப்புத்தெரிவித்தது. பேச்சுவார்த்தைகளுக்குக் குறுக்கே இந்தியா நிற்கப்போவதில்லை என்பது இப்போது தெளிவாகிவிட்டது"— என்றும் அந்த அதிகாரி கூறினார்.

ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களை இந்தியா ஏன் எதிர்த்தது? என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில்—

ராஜீவ் காந்தியின் கொலையின் பின்னால் விடுதலைப் புலிகள் தான் இருந்தனர் என்பது இந்தியாவின் நம்பிக்கை, இருப்பினும் இந்தியா எமது நட்புநாடு. தமது எதிரியுடன் நாம் சமாதானம் பேசுவதை இந்தியா எதிர்ப்பது இயற்கையே" — என்று அந்த அதிகாரி கூறினார்.

**ஆசியும் இல்லை எதிர்ப்பும் இல்லை**

'விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுகளுக்கு இந்தியா 'ஆசி' வழங்கியிருப்பதாக நான் கூறமாட்டேன். ஆனால் இந்தியா அதில் தலையிடமாட்டாது என்று மட்டும் நான் நிச்சயமாகக் கூறுவேன்" — என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

பிரதமர் சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் பதவிக்கு வந்ததை அடுத்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் என்று சர்வதேச சமூகம் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இந்த எதிர்பார்ப்பு இந்தியாவுக்குத் தெரிந்ததே.

இச்சூழ்நிலையில் ஆக்கபூர்வமான சமாதான முன்முயற்சிகளை எதிர்க்கும் எந்த நடவடிக்கையும் பாதகமான ஒரு விஷயமாகவே கருதப்படும் என்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

இது பற்றி கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளிடமிருந்து அபிப்பிராயம் பெறமுடியவில்லை.

இனப்பிரச்சினை விஷயத்தில் கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகம் அண்மைக்காலமாக அவ்வளவு முக்கியத்துவம் கொடுத்து வரவில்லை என்று அவதானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

**லயனலின் இந்தியப் பயணம்**

லயனல் பெர்னாண்டோவின் இந்திய விஜயத்துக்கு என்ன காரணங்கள் முன்னர் கூறப்பட்டிருந்தாலும் இப்போது ஒன்று தெளிவாகிவிட்டது.

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முன் முயற்சி ஆரம்பமானவுடன் லயனல் பெர்னாண்டோ இந்தியா சென்றது. இந்திய வெளியுறவு அமைச்சு அதிகாரிகளைச் சந்தித்து, சமாதானப் பேச்சு பற்றிய இலங்கை அரசின் நிலைப்பாட்டை எடுத்துக் கூறவே என்பது இப்போது தெளிவாகி விட்டது.

திரு. லயனல் பெர்னாண்டோ இந்தியாவில் இருந்து திரும்பிய பின்னர் தான் அரசாங்கம் விடுதலைப் புலிகளுக்கு தனது பதிலை அனுப்பியது; பூர்வாங்கப் பேச்சில் கலந்து கொள்ளும் தமது பிரதிநிதிகளின் பெயர்களையும் அரசு வெளியிட்டது; முதல் சுற்றுப் பேச்சுக்கான திகதிகளையும் அரசு நிர்ணயித்தது.—இவ்வாறு 'சண்டே ஒப்சேவர்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லயனல் பெர்னாண்டோ இந்தியா சென்ற சிலதினங்கள் கழித்து, கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் நரேஷ்வர் தயாளும் புதுடில்லி பயணமானார்.

**கல்கத்தா ஸ்டேட்ஸ்மன் வெளியிட்ட தகவல்**

இதேவேளை—

இந்த விடயம் குறித்து தகவல் வெளியிட்ட—கல்கத்தாவிலிருந்து வெளிவரும்—"ஸ்டேட்ஸ்மன்" பத்திரிகை—

புதுடில்லி அரசின் உடந்தையுடன் தமிழ்நாடு அரசியல் தலைமைத்துவம் இலங்கை விவகாரங்களில் தலையிட்டு வந்த காலம் முடிவடைந்து விட்டது என்று இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் இலங்கை அரசுக்கு உறுதியளித்திருக்கிறார் என்று தெரிவித்திருக்கிறது.

நரசிம்மராவின் இச்செய்தியைத்தான் ராவின் சிறப்புத் தூதர் ஏ. என். வர்மா கொழும்புக்கு சென்று பிரதமர் சந்திரிகாவிடம் தெரிவித்தார் என்றும் அப்பத்திரிகை குறிப்பிட்டது.

ராவின் சிறப்புத் தூதர் வர்மாவின் இலங்கை விஜயம் பற்றி இந்தியாவில் அதிகாரத்தில் உள்ளோர் கருத்து வெளியிட மறுத்து வந்தாலும்—

செய்தி அறிக்கைகளின்படி நரசிம்மராவின் செய்தி முன் கண்டவாறே அமைந்துள்ளது என்று திரு. சி. ஆர். ஈரானி என்பவர் அப்பத்திரிகையில் தெரிவித்துள்ளார்.

"இனப்பிரச்சினை இலங்கையின் உள்நாட்டுப் பிரச்சினை. உதவி கோரப்பட்டால் மட்டுமே இந்தியா உதவும். மற்றப்படி இந்தியா தன்னை இது விஷயத்தில் முன்னுக்கு சென்று திணித்துக்கொள்ளாது."— இப்படி பிரதமர் ராவ் வலியுறுத்தி இருப்பது சரியானதே என்றும் திரு. ஈரானி தமது கட்டுரையில் மேலும் தெரிவித்துள்ளார். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 12 - 10 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது